மேலும் இராமநாதபுரம் டி.எஸ்பி. க்கு ஆர்டர்லி கிடையாது டைப்பிஸ்ட் கிடையாது. அப்படி என்றால் மினிஸ்டிரியல் சர்வீஸ் ஊழியர் போடவேண்டிய அவசியம் என்ன. காவல் துறையில் உள்ள குறைகளைப் போக்குகின்ற அதே நேரத்தில், காவல்துறையினரிலே ஒரு சிலர் பண்ணுகிற அட்டுழியங்கள், அதனை எதிர்த்து மக்கள் எழுகிறார்கள். ஒரு சிலர் மக்கள் விரோத சக்தியாகச் செயல்படுகிறார்கள். மக்களைக் கொள்ளை அடிக்கின்ற, வீடு புகுந்து கொள்ளை அடிக்கின்ற அந்த காவல் துறையினரை மக்கள் கொதித்து எழுவதற்கு முன்பாக தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

5. அறிவிப்பு.

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

24—3—1982 (புதன்) மற்றும் 25—3—1982 (வியாழன்)	ஏற்கனவே அறிவித்துள்ளபடி—மாறுதல் இல்லை.
26—3—1982 (வெள்ளி)	தெலுங்கு வருடப் பிறப்பு—விடுமுறை.
27—3—1982 (சனி)	காலை : கேள்வி நேரம் இல்லை. 1. 1981–82 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு—விவாதமின்றி நிறைவேற்றல். 2. மானியக் கோரிக்கை எண். 15—காவல்துறை மற்றும் மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் மீது மேலும் விவாதம்.

மாலை :

1. பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரை—மானியக் கோரிக்கை எண். 26 — கைத்தறியும், நெசவுத் தொழிலும்.
2. பிற்பகல் 6 மணி முதல் 8 மணி வரை—மானியக் கோரிக்கை எண். 22 கால்நடை வளர்ப்பு.

மானியக் கோரிக்கை எண். 30— சமூக நலன்.

28—3—1982 (ஞாயிறு) விடுமுறை.

29—3—1982 (திங்கள்) எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்

எண். 7—மாநில சட்டமன்றம்.

விவாதமின்றி 1 மணிக்கு வாக்கெடுப்படுபவை

எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.

எண். 8—தேர்தல்கள்.

எண். 43—பல்வகை.

எண். 55—பல்வகை மூலதனச் செலவு.

எண். 56—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

1982–83 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.

30—3—1982 (செவ்வாய்) 1982–83 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

31—3—1982 (புதன்) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

1—4—1982 (வியாழன்) தனியார் அலுவல்கள்.

2—4—1982 (வெள்ளி)
3—4—1982 (சனி) } அரசினர் சட்ட முன்வடிவுகள்.

4—4—1982 (ஞாயிறு). விடுமுறை.

5—4—1982 (திங்கள்) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

6—4—1982 (செவ்வாய்) மகாவீர் ஜயந்தி—விடுமுறை.

தேவையிருப்பின் பேரவை 7—4—1982 மற்றும் 8—4—1982 அன்றும் கூடி அரசினர் சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு நிறைவேற்றும்.

4. வரவு-செலவுத் திட்டம் 1982–83 வாக்கெடுப்பு—தொடர்ச்சி

*திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1973-லே, பெண்கள் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. ஆனால் சென்ற ஆண்டிலே, பெண் போலீஸ்காரர்களுக்கும், ஆண் போலீஸ்காரர்களுக்கும், கிட்டத்தட்ட 12 ஆயிரம் பேர்களுக்கு மேல் இன்டர்வியூ செய்யப்பட்டார்கள். ஆனால் அவர்களுடைய சான்றிதழ்கள் வாங்கி வைத்துக்கொண்டு, ஒரு சிலரைத் தவிர வேறு யாருக்கும் எந்தவிதமான தகவலும் அதைப் பற்றி கொடுக்கப்பட இல்லை. அவர்கள் வேறு உத்தியோகத்திற்குப் போவதற்குக்கூட தங்களுடைய சான்றிதழ்கள் இல்லாத காரணத்தினால் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் நேரிலே கொண்டு வந்தேன். நிச்சயமாக பெண் போலீஸ்காரர்களுக்கு உத்தியோகம் கொடுத்துவிடுவோம். ஆண்களுக்கும் கொடுக்கப்படும், இல்லையானால், சான்றிதழ்கள் எல்லாம் திருப்பி கொடுக்கப்படும் என்று உறுதிமொழி கொடுத்தார்கள். ஆனால் இன்றையவரையிலும் அது கொடுக்கப்படாமல் இருப்பது வருந்தத்தக்கது என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.